1980 ஜூலை 23]

கந்தசாமிக்கண்டர் கல்லூரி, வேலூர்.

கு.கா.வி. எண் 36—திரு. என். எஸ்; வி; சித்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், வேலூரில் உள்ள கந்தசாமிக்கண்டர் கல்லூரியில் இந்த ஆண்டில் பி.காம்., எம்.எஸ்ஸி. வகுப்புகளுக்கு மாணவர் அனுமதிப்பது நிறுத்தி வைக்கப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை. மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: இந்தக் கல்லூரி நிர்வாகத்தினர் அங்கே பணி செய்கிற ஆசிரியர்களுக்குள் பாகுபாடு செய்து தங்களுக்கு வேண்டிய ஆசிரியர்களை வைத்துக்கொண்டு வேண்டாத ஆசிரியர்களை அனுப்பிவிட வேண்டுமென்ற எண்ணத்தால் பி.காம்., எம்.எஸ்ஸி. போன்ற வகுப்புகளை எடுத்துவிட வேண்டுமென்ற நோக்கத்தில் செய்வதாக இருந்தார்கள். ஆசிரியர்கள் யாரும் வேலையிலிருந்து நீக்கப்படாமல் பணியாற்றுகிறார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: சேலம் மாவட்டம் வேலூரில் உள்ள கந்தசாமி கண்டர் கல்லூரியில் பி.காம்., எம்.எஸ்ஸி. வகுப்புகளுக்கு மாணவர்களை எடுப்பதில்லை என்ற புகார் கடிதம் எங்களுக்கும் வந்தது. அவர்களிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விளக்கம் கேட்டபோது அந்த வகுப்புகளுக்கு மாணவர்கள் சேர்க்கும் பணி நடைபெற்று வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த விவரந்தான் இருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியிலே அங்கே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் பாகுபாடு இல்லாமல் தொடர்ந்து வேலை செய்யக்கூடிய முறையிலே வேலை செய்து கொண்டிருக்கிறார்களா என்று கேட்டேன். பாகுபாட்டு நிலைமையில் வேண்டாத ஆசிரியர்கள் பணியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்களா என்பதையும், இதுவரையில் நீக்கப்பட்டு இருந்தாலும், இனிமேல் அப்படிப்பட்ட நிலைமை தொடராது இருக்கின்ற முறையிலே என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அறிவிக்க இயலுமா ?

[1980 ஜூலை 23

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இந்தத் துணைக் கேள்வி மூலக்கேள்விக்கு வெளியேதான் வருகிறது. நேரடியாகப் பதில் சொல்லக்கூடிய முறையிலே என்னிடத்திலே இப்போது தகவல் இல்லை. நேற்றைக்கும், நேற்றைய முன்தினமும் சென்னையிலே உள்ள கல்லூரித் தலைவர்களிடத்திலே பேசி, நகர்ப் பகுதியிலே உள்ள கல்லூரிகளுக்கு மாண வர்கள் அதிகமாக வருகின்ற காரணத்தினால் அவர்களுக்கு இடம் தரப்பட வேண்டுமென்ற முறையிலே அதிகப்படியான ஆசிரியர்களை வெளியேற்றாமல் அவர்கள் பணியாற்றுகின்ற வகையிலே இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். இதே அறிவுரையை மற்றப் பகுதிகளிலே உள்ள ரீஜினல் டைரக்டர்களுக்குச் சொல்லி அவர்கள் மூலமாக மற்றக் கல்லூரித் தலைவர்களையும் இவ்வாறு அறிவுறுத்திக் கொண் டிருக்கிறோம். இவ்வறிவுரையின்படி அந்தக் கல்லூரி தலைவர்கள் நடக்க முன்வருகிறபோது இந்த ஆசிரியர்களைப்பற்றிய பிரச்சினை வராது என்று நம்புகிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் ஹையர் செகண்டரி, பி.யு.சி.க்கு இணையாக இருக்கிறது என்ற நல்ல எண்ண அறிவிப்பை இந்த அவையிலே தெரிவித்தார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கந்தசாமி கண்டர் கல்லூரியைப் பற்றிய கேள்வி. மூலக் கேள்வியை ஒட்டி கேளுங்கள்.

திரு. பாபு ஜனார்த்தனன்: தாங்கள் தயவுசெய்து கேள்வியை அட்மிட் செய்ய வேண்டும். மினிஸ்டர் பதில் சொல்லாவிட்டாலும் பரவாயில்லை. அமைச்சர் அவர்கள் ஹையர் செகண்டரி பி.யு.சி.க்கு இணையாக இருக்கிறது என்ற நல்ல எண்ண அறிவிப்பை இந்த அவையிலே தெரிவித்தார்கள். ஆனால் பல கல்லூரிகளிலே பட்டப்படிப்பிலே சேர்ப்பது புறக்கணிக்கப்படுகிறது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி போடுகிற உரிமையை யாரும் மறுக்கவில்லை. பொதுவாகக் கேட்கிறபோது எல்லா விவரங்களும் அமைச் சரிடம் இல்லாமல் இருக்கும். எனவே மூலக் கேள்வியை ஒட்டியே கேட்க வேண்டும்.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, அரசு மானியங்களைப் பெற்று நடைபெறுகின்ற கல்லூரி ஒன்று கந்தசாமி கண்டர் கல்லூரி என்றும் வேறு பலவிதமான ஜாதியின் பெயரால் அழைக்கப்படுகின்ற நிலைமையை அரசு தடுத்து நிறுத்துமா?

1980 ஜூலை 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தப் பெயர் அக்கல்லூரிக்கு வைத்து ரொம்பக் காலம் ஆயிற்று. அது எல்லாம் வேண்டாம்.

நாகர்கோவிலில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்.

கு.கா.வி. எண் 37—திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவிலில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டப்பணி என்ன நிலையில் உள்ளது?

(ஆ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) நாகர்கோவிலில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்ட ஆய்வுப் பணிகள் சமீபத்தில் முடிவுற்று இத் திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) உத்தேச மதிப்பீட்டின் மீது அரசின் நிர்வாக ஒப்புதல் பெற்றபின் திட்டம் ஆரம்பிக்கப்படும்.

திரு. மி. வின்சென்ட்: தலைவர் அவர்களே, நாகர்கோவிலில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்தின் உத்தேச மதிப்பீடு எவ்வளவு? அதை இந்த வாரியம் எப்போது முடிவுசெய்து அரசின் நிர்வாக ஒப்புதலுக்கு அனுப்பும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நாகர்கோவில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு உத்தேச மதிப்பீடு 9 கோடி ரூபாய்க்குத் தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. உத்தேச மதிப்பீடு ஆகஸ்டு மாத இறுதிக்குள் முடிவு செய்யப்பட்டு அரசின் நிர்வாக ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும்.

திரு. மி. வின்சென்ட்: தலைவர் அவர்களே, ஆக்கப்பூர்வமான பணிகளை வேகமாக நடத்தும் இந்த அரசின் நிர்வாகம் எப்போது ஒப்புதல் வழங்கும்? அந்தக் கழிவு நீர் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நகரின் நில மட்ட அளவுக்கு இந்நகரின் பல்வேறு பகுதிகள் பிரிக்கப்பட்டு கழிவு நீர் எல்லாம் ஓரிடத்தில் சேகரிக்கப்பட்டு, நகரத்திலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஆசாரி பள்ளம் என்ற இடத்திற்கு அருகில் உள்ள கழிவுநீர் பகுதிக்கு உந்தப்படும். பின்னர் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் பயிர் செய்யப் பயன்படுத்தப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS